**<u>STARTING TIME 01.08 P.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 74/2025</u>**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 03.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சந்திரசேகரன் Father's Name : துளசிதரன்

Address : கதவு எண் 11, தேரடி வீதி, காவேரிபாக்கம் கிராமம், நெமிலி வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 54

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. இவ்வழக்கின் வாதியை தெரியுமா என்றால், தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை நான் தான் வாதியின் பெயருக்கு கையெழுத்து செய்து எழுதிக் கொடுத்தேன் என்றால், சரிதான். வா.சா.ஆ.1–ல் 1–வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ள ராஜமுத்து என்பவர் வெளி நபர், 2–வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ள சத்யா என்பவர் எனது மனைவி என்றால், சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கடனுறுதி சீட்டிலும் மேற்படி ராஜமுத்து மற்றும் சத்யா என்பவர்கள் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கடனுறுதி சீட்டின் பேரில் கொடுக்க

வேண்டிய பணத்தை திரும்ப கேட்டு தான் வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த அறிவிப்பை நான் வா.சா.ஆ.4–ன் மூலம் பெற்றுக் கொண்டேன் என்றால், சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால், இல்லை.

3. எனது பதிலுரையில், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை ஒப்புக் கொண்டு வா.சா.ஆ.2 கடனுறுதி சீட்டை மறுத்துள்ளேன் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கடனுறுதி சீட்டுகளை ஒரே தேதியில் வாதியின் பெயருக்கு எழுதிக் கொடுத்து தற்போது வா.சா.ஆ.1–ஐ ஒப்புக் கொண்டு, வா.சா.ஆ.2–ஐ மறுக்கின்றேன் என்றால், சரியல்ல.

4. எனக்கு காவேரிப்பாகத்தில் சொந்தமாக 3 கடைகள் உள்ளது என்றால், சரிதான், ஆனால் அவைகளை நான் அடமானம் போட்டுள்ளேன், அதற்கு வாடகை எதுவும் வாங்குவதில்லை. நான் சொல்லும் அடமானம் என்பது வாடகை இல்லாமல் தொகையை பெற்றுக் கொண்டு சுவாதீனம் ஒப்படைத்துள்ளேன் என்றால், சரிதான். அந்த தொகையை திருப்பி கொடுக்கும் வரை பணத்தை கொடுத்தவர் வாடகை தர வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரிதான். அவ்வகையில் எனக்கு சொந்தமான ஒரு கடையை வாதி வாடகைக்கு இருந்து வருகிறார் என்றால், ஏற்கனவே இருந்தார், தற்போது வாதி இல்லை, அவரது தம்பி உள்ளார்.

5. என்னிடம் காட்டப்படும் சொத்து வரி ரசீதுகள், எனக்கு சொந்தமான சொத்தில் வாதி வாடகைக்கு இருந்த போது என் பெயரில் செலுத்திய சொத்து வரி ரசீதுகள் என்றால், சரிதான். 26.03.2019 தேதியிட்ட சொத்து வரி ரசீது **வா.சா.ஆ.5–**ஆகவும், 22.11.2022 தேதியிட்ட சொத்து வரி ரசீது **வா.சா.ஆ.6**–ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.5 ரசீதில் ஒரு வருடத்திற்கான சொத்து வரி ரூ.920/– என உள்ளது என்றால், சரிதான். அதே தொகை தான்

வா.சா.ஆ.6 ரசீதின் மூலம் செலுத்தியுள்ளார் என்றால், சரிதான். 2019–ம் ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை எனக்கு சொந்தமான சொத்திற்கான சொத்து வரியானது ஆண்டுக்கு ரூ.920/– என்றால், சரிதான். எனவே, தமிழ்நாடு கடன் நிவாரண சட்டத்தின்படி எனக்கு கடன் நிவாரணங்கள் கிடைக்கதக்கதல்ல என்றும், அதனால் கடனுறுதி சீட்டில் ஒப்புக் கொண்டவாறு வட்டியை செலுத்த கடமைப் பட்டுள்ளேன் என்றால், சரியல்ல.

6. நான் வாதியிடம் வாங்கிய தொகையில் ஒரு பகுதியை ஒப்புக் கொண்டு, மற்றொரு பகுதியை மறுத்து பொய்யான சங்கதிகளை கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், நான் வாதியிடமிருந்து 2012–ம் ஆண்டு ரூ.50,000/–ம் வாங்கினேன், அதற்கு 2015–ம் ஆண்டு வரை வட்டி செலுத்தி வந்தேன், அதன் பிறகு எனது மனைவி காலமாகிவிட்டதால் வட்டி செலுத்த முடியவில்லை, அந்த சமயத்தில் புதிய பாண்டு எழுதிக் கொடுக்குமாறு வாதி கேட்டதால் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை மட்டும் எழுதிக் கொடுத்தேன்.

7. நான் சொல்வது போல் 2012–ம் ஆண்டு கடன் வாங்கியதற்கும், அதற்கு வட்டி கொடுத்தற்கும் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால், இல்லை. நானும், எனது மனைவியும் சேர்ந்து தான் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2–ல் உள்ள கடனை வாங்கினோம் என்றும், அதனால் தான் எனது மனைவி சாட்சியாகவும் கையெழுத்து செய்துள்ளார் என்றும், தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

8. சொத்து வரி ரசீதுகளை தாக்கல் செய்ய வேண்டி வாதி தரப்பில் மனு தாக்கல் செய்த போது அவைகளை என்னிடம் இல்லை என பதில் அளித்துள்ளேன் என்றால், சரிதான். எனவே, ஆண்டுக்கு 9 சதவீகிதம் மட்டுமே வட்டி செலுத்த வேண்டும் என எனது பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளது தவறு என்றால், சரியல்ல. எனவே, வாதி

கோரியவாறு வழக்கில் தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME 01.35. P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.02.03 14:51:02 +0530